விஜயபாரதம்
மின்னணு தின இதழ் (தனிச்சுற்று) VIJAYABHARATHAM DAILY
பிலவ, வைகாசி - 18 செவ்வாய் 01.06.2021 மலர் - 2, இதழ் - 56

# ஒரு முக்கிய அறிவிப்பு




கொரோனா சூழல், பொதுமுடக்கம், சந்தாதாரர்களுக்கு அஞ்சலில் அனுப்புதல் உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் விஜயபாரதம் வார இதழ் கடந்த இரண்டு வாரங்களைபோல, இந்த வாரமும் (14.6.2021) பிரசுரித்து அனுப்ப இயலாத சூழல் நிலவுகிறது என்பதை சந்தாதாரர்களுக்கு தெரிவித்துக் கொள்வதுடன் உங்கள் ஒத்துழைப்பையும் நாடுகிறோம்.

---

# மேற்கு வங்கம் சிவில் சொசைட்டி குழு அறிக்கை



மேற்கு வங்கத்தில் வாக்கெடுப்புக்கு பிந்தைய வன்முறைகள் குறித்து சிவில் சமூகக் குழுவான புத்திஜீவிகள் மற்றும் கல்வியாளர்கள் அடங்கிய குழு (ஜி.ஐ.ஏ) ஒரு அறிக்கையை மத்திய இணை அமைச்சர் ஜி. கிஷன்ரெட்டியிடம்சமர்ப்பித்துள்ளது. இதனை குறித்து பேசிய கிஷன் ரெட்டி, 'இக்குழு உறுப்பினர்கள் உண்மை கண்டறியும் குழுவாக செயல்பட்டனர். திருணமூல் குண்டர்களால் கொலை செய்யப்பட்ட, பாலியல் பலாத்காரம் செய்யப்பட்ட, சொத்துக்கள் சுறையாடப்பட்டவர்கள் குடும்பத்தினருடன் நேரில் சந்தித்து உரையாடி தகவல்கள் சேகரித்தனர். ஜி.ஐ.ஏ தவிர, பல்வேறு குழுக்களும் இது போன்ற அறிக்கைகளை அரசுக்கு சமர்ப்பித்துள்ளன. மத்திய உள்துறை அமைச்சருடன் கலந்து பேசிய பின்னர் அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கப்படும்' என்று அவர் கூறினார். ஜி.ஐ.ஏ குழுவில் ஒருவரான உச்சநீதிமன்ற வழக்கறிஞர் மோனிகா அரோரா, 'திருணமூல் கட்சியினரின் வன்முறையை காவல்துறை வேடிக்கை பார்த்தது. பட்டியல் சாதியினர் மற்றும் பட்டியல் பழங்குடியினரின் வன்முறையால் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளனர். தேசிய மனித உரிமைகள் ஆணையம், தேசிய பெண்கள் ஆணையம், பட்டியல் சாதியினருக்கான தேசிய ஆணையம், பட்டியல் பழங்குடியினருக்கான தேசிய ஆணையம் மற்றும் சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான தேசிய ஆணையம் ஆகியவை இதனை விசாரித்து தேவையான சம்மன் அனுப்ப வேண்டும். மாநில டி.ஜி.பி. மற்றும் தலைமைச் செயலாளர் சட்டத்தின் படி, எஃப்.ஐ.ஆர் பதிவு செய்ய வேண்டும், வன்முறையாளர்கள் யாராக இருந்தாலும் கைது செய்யப்பட வேண்டும். சட்டத்தின் ஆட்சி மேலோங்க வேண்டும்' என்று தெரிவித்தார்.

# தடுப்பூசி முகாமில் தி.மு.க. வினர் அராஜகம்



முன்னாள் முதல்வரும், அ.தி.மு.க ஒருங்கிணைப்பாளருமான ஓ.பன்னீர்செல்வம் வெளியிட்டுள்ள அறிக்கையில், "ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி ஆரம்ப சுகாதார நிலையத்துக்குட்பட்ட லக்காபுரத்தில் கடந்த 7ம் தேதி, கொரோனா தடுப்பூசி முகாம் நடப்பதாக முன்களப் பணியாளர்களுக்கு தகவல் அறிவிக்கப்பட்டது. அவர்கள் தடுப்பூசி முகாமிற்கு சென்றனர். ஆனால் உள்ளே யாரும் அனுமதிக்கப்படவில்லை. பக்கவாட்டு வழியா தி.மு.க பிரமுகர்களின் உறவினர்கள், நண்பர்கள், குடும்பத்தினர் உள்ளிட்ட சிலர் மட்டுமே உள்ளே அனுமதிக்கப்பட்டனர். அவர்களுக்கு மட்டுமே முன்னுரிமை அளிக்கப்பட்டது. முகாமிற்கு வெளியே நின்றிருந்த முன்களப் பணியாளர்கள் காவல்துறையினரால் அப்புறப்படுத்தப்பட்டனர் என பத்திரிகைகளில் செய்தி வெளிவந்துள்ளது. இதுபோன்ற சம்பவங்கள் முன்களப் பணியாளர்களை அலைக்கழிப்பதுடன், கொரோனா பரவல் அதிகரிக்கவும் வழிவகுக்கிறது. முதல்வரின் ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளுக்கு தி.மு.கவினர் செயல் குந்தகம் விளைவிப்பதாக உள்ளது. எனவே, ஒவ்வொரு பகுதியில் உள்ள முன்னுரிமை பெற்றவர்களுக்கு முன்கூட்டியே தகவல் தெரிவித்து, காவல்துறையினரின் உதவியுடன், சமூக இடைவெளியைக் கடைபிடித்து அவர்கள் தடுப்பூசி செலுத்திக்கொள்ள முதல்வர் நடவடிக்கை எடுக்க வேண்டும்" என வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# அது கொரோனா வார்டே கிடையாதாம்

கோவையில் முதல்வர் ஸ்டாலின் பி.பி.இ கிட்ட அணிந்து பார்வையிட்டது கொரோனோ நோயாளிகள் சிகிச்சை பெறும் வார்டு அல்ல, கொரோனோவில் இருந்து மீண்டவர்கள் மருத்துவ கண்காணிப்பில் இருக்கும் வார்டு அது. அதுவும் பார்வையாளர்கள் வந்து செல்லும் ரிஷப்ஷன் பகுதிதான் அது. இங்குதான் பி.பி.இ கிட் அணிந்து வந்த ஸ்டாலின், 10 அடி தொலைவில் நின்று, குணமாகிய நோயாளிகளை பார்வையிட்டுவிட்டு புகைப்படங்கள் எடுத்துக்கொண்டார் என்ற தகவல்கள் வெளியாகியுள்ளன.



# இவ்வருட இறுதிக்குள் தடுப்பூசி



மத்திய அரசு இன்று உச்ச நீதிமன்றத்தில் 2021 இறுதிக்குள் முழு தகுதியுள்ள மக்களுக்கும் தடுப்பூசி போடப்படும் என்று தெரிவித்துள்ளது. உள்நாட்டு தடுப்பூசி உற்பத்தியாளர்களான எஸ்ஐஐ, பாரத் பயோடெக் மற்றும் ரெட்டீஸ் லேப் ஆகியவற்றிலிருந்து மேற்கொள்ளப்படும் தடுப்பூசி உற்பத்தி, 18 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் தடுப்பூசி போட போதுமானதாக இருக்கும். தவிர, தடுப்பூசி அளவுகளை வழங்குவதற்காக ஃபைசர் போன்ற நிறுவனங்களுடன் மத்திய அரசு பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது. இதில் வெற்றி பெற்றால், காலக்கெடு மாறி, முன்னதாகவே அனைத்து தகுதியுள்ள மக்களுக்கும் தடுப்பூசி செலுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வங்கிகள் எச்சரிக்கை

பாரதத்தில் உள்ள எச்.டி.எஃப்.சி, எஸ்.பி.ஐ உள்ளிட்ட முக்கிய வங்கிகள், பிட் காயின், எதிரீயம் போன்ற கிரிப்டோகரன்ஸிகள் எனப்படும் மெய்நிகர் நாணயங்களில் வர்த்தகம் செய்ய தங்கள் சேவைகளைப் பயன்படுத்துவது குறித்து வாடிக்கையாளர்களை எச்சரித்து மின்னஞ்சல்கள் அனுப்பத் துவங்கியுள்ளன. அதில், இந்திய ரிசர்வ் வங்கியின் 2018 சுற்றறிக்கையை மேற்கோள்காட்டி, மெய்நிகர் நாணயங்களை கையாளும் பயனர்களின் கணக்குகள் இடைநீக்கம், நிறுத்தம் ஆகிய நடவடிக்கைகளை சந்திக்க நேரிடும் என்று கூறப்பட்டுள்ளது.






# தடுப்பூசி ஜிகாத்

உத்தர பிரதேசத்தில், அலிகரில் உள்ள மருத்துவமனையில் பணியாற்றும் செவிலியர் நிஹாகான், கொரோனா தடுப்பூசி செலுத்திக்கொள்ள வந்தவர்களின் உடலில் ஊசியை மட்டும் செலுத்திவிட்டு, அதில் உள்ள மருந்தை உடலில் செலுத்தாமல் வெளியே எடுத்துவிடுவதை வழக்கமாக வைத்திருந்தார். தலைமை மருத்துவர் ஆஃப்ரீன் அதைப் பற்றி முன்னதாகவே அறிந்திருந்தார். இந்த வீடியோ சமீபத்தில் வெளியானதை அடுத்து குற்றம் சாட்டப்பட்டவர்கள் அனைவரும் இடைநீக்கம் செய்யப்பட்டனர். மருத்துவமனையில் ஆய்வின்போது மருந்து நிரப்பப்பட்ட ஆனால் மக்களுக்கு செலுத்தப்படாத 29 தடுப்பூசிகள் மீட்கப்பட்டன. இதனை அப்பகுதி மக்கள் தடுப்பூசிக்கான ஜிஹாத் இது. மக்களுக்கு தடுப்பூசியும் அதன் பலன்களும் கிடைக்காமல் இருக்க இவர்கள் இதனை திட்டமிட்டே செய்கின்றனர் என கூறியுள்ளனர். இது சமூக ஊடகங்களில் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியது.

# பாலியல் தொல்லை பயிற்சியாளர் மீது வழக்குப்பதிவு

சென்னை அண்ணா நகரை சேர்ந்த 26 வயதுடைய பெண் ஒருவர், கடந்த 2014ம் ஆண்டு முதல் சென்னையில் கெபிராஜ் என்பவர் நடத்தி வந்த தற்காப்பு பயிற்சியகத்தில் தான் சேர்ந்து பயிற்சி பெற்று வந்ததாகவும் ஜூடோ போட்டிக்காக நாமக்கல் சென்று திரும்பும் போது பயிற்சியாளர் கெபிராஜ் காரில் வைத்து பாலியல் தொந்தரவு செய்ததாகவும், ஒத்துழைப்பு தராததால் கொலை செய்து விடுவேன் என மிரட்டியதாகவும் தெரிவித்து அண்ணா நகர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளார். காவல் துறையினர் பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டப்பிரிவின் கீழ் கெபிராஜை கைது செய்து வழக்குப்பதிவு செய்துள்ளனர்.



# இன்று முதல் புதிய கல்வி ஆண்டு



சி.பி.எஸ்.இ மற்றும் ஐ.சி.எஸ்.இ., பாட திட்டங்களில், ஏப்ரல் மாதமே புதிய கல்வி ஆண்டு துவங்கிவிட்டது. மாணவர்களுக்கு புதிய கல்வி ஆண்டுக்கான பாடங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. தமிழக பாடத்திட்டத்தின்படி, ஒவ்வொரு ஆண்டும் ஜூனில்தான் கல்வி ஆண்டு துவங்கும். அதன்படி, மே 1 முதல் கோடை விடுமுறையை பள்ளி கல்வி இயக்குனரகம் அறிவித்தது. புதிய கல்வி ஆண்டுக்கான முன்னேற்பாடுகளை மேற்கொள்ள, மே மாதம் இறுதியில், ஆசிரியர்கள் பள்ளிக்கு வர வேண்டியிருக்கும் என முன்பு அறிவிக்கப்பட்டது. கோடை விடுமுறை காலம் நேற்றுடன் முடைந்துவிட்டது. இன்று முதல் புதிய கல்வி ஆண்டு துவங்குகிறது. கடந்த ஆண்டில், கொரோனா ஊரடங்கு அமலில் இருந்த போதும், ஜூன் 1 முதல் ஆன்லைன் வழி பாடங்களை நடத்த, பள்ளிகளுக்கு கல்வித்துறை சுற்றறிக்கை அனுப்பியது. அதன்படி, ஆன்லைன் வகுப்புகள் துவங்கின. ஆனால், தற்போது புதிய கல்வி ஆண்டு துவங்கும் நிலையில் அதற்கான முன்னேற்பாட்டு பணிகள் ஏதும் இதுவரை துவக்கப்படவில்லை. புதிய கல்வி ஆண்டு குறித்து பள்ளிக்கல்வி இயக்குனரகம் எந்த தகவலையும் தங்களுக்கு அனுப்பவில்லை என, ஆசிரியர்கள் தெரிவித்துள்ளனர்.

# பாபா ராம்தேவுக்கு டாக்டர்கள் சவால்



ஐ.எம்.ஏ எனப்படும் இந்திய மருத்துவ சங்கத்தைச் சேர்ந்த டாக்டர் அஜய் கன்னா என்பவர் யோகா குரு பாபா ராம்தேவுக்கு, 'அலோபதி' மருத்துவம் குறித்து அவதுாறான கருத்து பரப்பியதாக ஏற்கனவே நோட்டீஸ் அனுப்பி உள்ளார். இந்நிலையில், அலோபதி மருத்துவம் குறித்து தங்களுடன் நேருக்கு நேர் விவாதிக்க வேண்டும் என பாபா ராம்தேவுக்கு கடிதம் எழுதியுள்ளார் அஜய் கன்னா. மேலும், விவாதத்தில் பங்கேற்க, பதஞ்சலி யோகபீடத்தில் இருந்து பதிவு செய்த ஆயுர்வேத நிபுணர் குழுவை அனுப்ப வேண்டும். ராம்தேவ் தெரிவித்த கருத்துகள் குறித்து, ஐ.எம்.ஏவில் பதிவு செய்த மருத்துவர்கள் குழுவினருடன், பத்திரிகையாளர்கள், ஊடகத்துறையினர் முன்னிலையில் நேரடியாக விவாதிக்க வேண்டும். ஆயுர்வேத நிபுணர் குழுவில் பாபா ராம்தேவும் அவரது உதவியாளர் பாலகிருஷ்ணனும் பார்வையாளர்களாக மட்டுமே பங்கேற்கலாம். விவாதத்திற்கான நாள், நேரம் ஆகியவற்றை ராம்தேவ் முடிவு செய்யலாம். இடத்தை நாங்கள் முடிவு செய்வோம்' என அதில் கூறப்பட்டுள்ளது.

# பத்திரிகையாளர் குடும்பத்துக்கு 10 லட்சம்

கொரோனாவால் உயிரிழந்த பத்திரிகையாளர்களின் குடும்பத்துக்கு 10 லட்ச ரூபாய் நிதியுதவி அளிக்கப்படும் என உத்தர பிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத் அறிவித்துள்ளார். ஹிந்தி பத்திரிகை தினத்தை முன்னிட்டு, இந்த உதவியை முதல்வர் அறிவித்தார். மேலும், இறந்த ஊடகவியலாளர்களின் விவரங்களை




மாநில அரசின் தகவல் துறை ஏற்கனவே சேகரித்ததாகவும், நிதியுதவி ஞாயிற்றுக்கிழமை அன்றே அவர்களது குடும்பங்களுக்கு அனுப்பப் பட்டுவிட்டதாகவும் முதல்வர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

# இதுதானா இவரது கண்ணியம்

அண்மையில் நடந்த ஜி.எஸ்.டி கவுன்சில் கூட்டத்தில் கலந்து கொண்ட தமிழக நிதியமைச்சர் பழனிவேல் தியாகராஜன், கோவா மாநிலத்தை அவமதித்து பேசியதாகக் கூறப்படுகிறது. இதற்கு கோவா மாநில போக்குவரத்துத்துறை அமைச்சர் மவ்வின் கோடின்ஹோ கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். ஆனால், நான் மன்னிப்பு கேட்க மாட்டேன் என கூறிவிட்டார் பழனிவேல் தியாகராஜன். இந்நிலையில், தியாகராஜன் தமிழகத்தை களங்கப்படுத்திவிட்டார். மன்னிப்பு கேட்க வேண்டும், என தனது டுவிட்டர் பக்கத்தில் பி.டி.ஆரை டேக் செய்து டுவிட் போட்டார் வானதி சீனிவாசன். இதற்கு நீங்கள் பிறவியிலேயே பொய்யரா, ஐ.கியு திறன் குறைவா? என பொறுப்பில்லாமல் கேட்ட தியாகராஜன், கெட்ட நாற்றத்திற்கு ஜன்னலை மூடுவதைபோல நான் உங்களை பிளாக் செய்கிறேன் என கூறி பதிலுக்கு காத்திராமல் வானதி சீனிவாசனின் டுவிட்டர் ஐடியை பிளாக் செய்து விட்டார். பின்னர், இதை குறித்து வானதி சீனிவாசன், ‘எம்.ஐ.டியில் படித்த நிதியமைச்சருக்கு அரசியல் முதிர்ச்சியோ சமூக அக்கறையோ இல்லை' என்று கூறினார். தன் கருத்துகளுக்கு உடன்படாதவர்களிடம் இப்படி நடந்துகொள்வது பழனிவேல் தியாகராஜனுக்கு ஒன்றும் புதிது அல்ல. ஏற்கனவே, சத்குரு ஜக்கி வாசுதேவை தேவையே இல்லாமல் பழித்த இவர், முன்னாள் இன்போசிஸ் இயக்குனரும் பத்மஸ்ரீ விருது பெற்றவருமான மோகன்தாஸ் பை மற்றும் தி ஹிந்து பத்திரிகையின் மாலினி பார்த்தசாரதி ஆகியோரிடமும் இப்படி கண்ணியமற்ற முறையில் கருத்து தெரிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.







# ஐ.எம்.ஏ. தலைவருக்கு நீதிமன்றம் சம்மன்

இந்திய மருத்துவ சங்கத்தின் (ஐ.எம்.ஏ) தலைவர் டாக்டர் ஜான்ரோஸ் ஆஸ்டின் ஜெயலால், தனது பதவியையும் அலுவலகத்தையும் கிறிஸ்தவ மதமாற்றத்திற்கு பயன்படுத்தியதாகவும் அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று புகார் அளித்தது சட்ட உரிமைகள் பாதுகாப்பு மன்றம் (எல்.ஆர்.பி.எஃப்). ஜெயலால் அளித்த இரண்டு நேர்காணல்களில் அவர் கூறிய 'ஹிந்துக்களை மதமாற்றம் செய்வது குறித்து அவர் பேசிய பேச்சு, தொழுநோய், காலரா மற்றும் பிற தொற்றுநோய் காலங்களை பயன்படுத்தி நடத்தப்பட்ட மதமாற்றம், அதேபோல தற்போது கொரோனா காலத்தை பயன்படுத்தி மதமாற்றம் செய்ய அவர் மேற்கொண்ட முயற்சிகள்' போன்ற பேச்சுக்கள் இதற்கு ஆதாரமாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில், டில்லி உயர்நீதிமன்றம், ஜெயலால் மே 31ல் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு சம்மன் அனுப்பியுள்ளது.

# டுவிட்டர் மீது வழக்கு பதிவு செய்யும் என்.சி.பி.சி.ஆர்

தவறான தகவல்களை வழங்கியதற்காக டுவிட்டருக்கு எதிராக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யுமாறு, குழந்தைகள் உரிமை பாதுகாப்பு ஆணையம் (என்.சி.பி.சி.ஆர்) டெல்லி காவல்துறையிடம் கேட்டுக்கொண்டது. ஆன்லைன் தளங்களில் கிடைக்கும் குழந்தைகள் பாலியல் துஷ்பிரயோக விஷயங்களை (சி.எஸ்.ஏ.எம்) தடுக்கவும் எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்து அறியவும் என்.சி.பி.சி.ஆர் அமைப்பு, கூகிள், ட்விட்டர், வாட்ஸ்அப், ஆப்பிள் இந்தியா போன்ற நிறுவனங்களுக்கு கடந்த ஆண்டு நோட்டீஸ் அனுப்பியது. மேலும் சி.எஸ்.ஏ.எம் 95% உயர்ந்துள்ளது என்று ஒரு ஆய்வையும் மேற்கோள் காட்டியது குழந்தைகள் உரிமை ஆணையம். சி.எஸ்.ஏ.எம் கூகிள் மற்றும் ஆப்பிள் ஆப் ஸ்டோர்களில் அணுகக்கூடியவை என்று கண்டறியப்பட்டுள்ளது. வாட்ஸ்அப்பைப் பொறுத்தவரை, சி.எஸ்.ஏ.எம்மை பகிர்ந்து கொள்ளும் ஏராளமான மறைக்கப்பட்ட பல வாட்ஸ்அப் குழுக்கள் இயங்குகின்றன என்று அது கூறியது.

இந்நிலையில், இது குறித்த விசாரணையில், டுவிட்டர் இந்தியா நிறுவனம் தங்களுக்கும் அமெரிக்காவை சேர்ந்த டுவிட்டர் இன்க் நிறுவனத்துக்கும் சம்பந்தம் இல்லை, டுவிட்டரில் பகிரப்பட்ட உள்ளடக்கத்திற்கு நாங்கள் பொறுப்பல்ல என்றும் கூறியது. ஆனால் டுவிட்டர் கம்யூனிகேஷன்ஸ் இந்தியாவின் பின்னணியை என். சி.பி.சி.ஆர் ஆய்வு செய்தபோது, நிறுவனம் 10,000 பங்குகளை வெளியிட்டுள்ளது, அவற்றில் 9,999 பங்குகள் டுவிட்டர் இன்க் நிறுவனத்திற்கு சொந்தமானவை. டுவிட்டர் கம்யூனிகேஷன்ஸ் இந்தியாவின் குழுவில் உள்ள மூன்று இயக்குநர்களில் இரண்டு பேர் ட்விட்டர் இன்க் நிறுவன ஊழியர்கள் என கண்டறிந்தது. எனவே அரசுத் துறையிடம் பொய்யான தகவலை வழங்கியது, போக்ஸோ சட்டத்தை மீறியது, தங்கள் தாய் நிறுவனத்துடன் தொடர்பு இல்லை என்று பொய் கூறியது போன்ற காரணங்களுக்காக டுவிட்டர் இந்தியாவுக்கு எதிராக வழக்குப் பதிவு செய்ய பரிந்துரைக்கப்பட்டுள்ளது. மேலும் ,இதைப் போன்ற மைக்ரோ பிளாக்கிங் தளத்திற்கான அணுகல், குழந்தைகளுக்கு பாதுகாப்பானதாக மாறும்வரை அவற்றை குழந்தைகள் அணுக தடை விதிக்க வேண்டும், என்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.



# மோடிக்கு மமதா கோரிக்கை கடிதம்

மத்திய அரசு கடந்த வெள்ளிக்கிழமை இரவு மேற்கு வங்க தலைமைச் செயலாளர் அலபன் பாண்டியோபாத்யாவை மத்திய அரசு பணிக்கு அழைத்து உத்தரவிட்டதுடன், அவரை உடனடியாக விடுவிக்குமாறும் மாநில அரசிடம் கோரியது. ஆனால், மேற்கு வங்க அரசாங்கத்தால் அவரை விடுவிக்க முடியாது. இந்த முக்கியமான நேரத்தில் எங்கள் தலைமை செயலாளரை விடுவிக்கமாட்டோம்.” என்று அம்மாநில முதல்வர் மமதா பானர்ஜி தெரிவித்து பிரதமர் மோடிக்கு கடிதம் எழுதியுள்ளார். மேற்கு வங்க ஐ.ஏ.எஸ் அதிகாரியான அலபன் பாண்டியோபாத்யாய் மே 31ல் ஓய்வு பெறவிருந்தார்.



கொரோனா நிர்வாகத்தில் பணிபுரிய மத்திய அரசு ஒப்புதல் அளித்ததைத் தொடர்ந்து அவருக்கு மூன்று மாத கால நீட்டிப்பு வழங்கப்பட்டது. இந்த நிலையில்தான் அவர் மத்திய அரசு பணிக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

# கொரோனா போரில் டி.டி.பியின் முக்கிய பங்கு

சீனாவில் இருந்து பரவிய கொரோனாவை எதிர்த்துப் போராடுவதற்கான தொழில்நுட்பங்களை விரைவாகக் கொண்டுவருவதிலும், தொற்றுநோயைச் சமாளிக்க தேசத்திற்கு உதவுவதிலும் அறிவியல் அடிப்படையிலான அமைப்புகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. அவ்வகையில், கொரோனா தொற்றுநோயை எதிர்த்துப் போராடுவதற்கான தீர்வுகளைத் தரும் நிறுவனங்களின் திட்டங்களுக்கான நிதி உதவியை அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை அமைப்பான 'தொழில்நுட்ப மேம்பாட்டு வாரியம்' (டி.டி.பி) வழங்கியது. இதனால், பல ஸ்டார்ட்அப் நிறுவனங்கள், தாங்கள் கண்டுபிடித்த, தயாரித்த பொருட்களைக் கொண்டு கொரோனாவுக்கு எதிரான போரில் மக்களுக்கு உதவின. உதாரணமாக டி.டி.பியின் உதவியால் பி.சி.ஆர் அடிப்படையிலான மூலக்கூறு கண்டறியும் கருவியை புனேவைச் சேர்ந்த மைலாப் டிஸ்கவரி தயாரித்தது. இந்த கிட் உற்பத்தியால் குறுகிய காலத்தில் தினசரி கொரோனா சோதனை 30 ஆயிரத்தில் இருந்து 2 லட்சமாக அதிகரித்தது. பாரதத்தில் முதல்முறையாக வீட்டிலேயே சுய கொரோனா பரிசோதனைக் கருவி 'கோவிசெல்ஃப்' உருவாக்கப்பட்டது. இதைப்போல, பல பரிசோதனை கருவிகள், முக கவசங்கள், சானிடிசர்கள், வெப்ப அளவு மானிகள், மருத்துவ சாதனங்கள் போன்ற பலவற்றை தயாரித்து வணிகமயமாக்க பேருதவி புரிந்துள்ளது டி.டி.பி.



# புதிய நாடாளுமன்றம் மனு தள்ளுபடி

புதிய நாடாளுமன்ற கட்டடம் கட்டும் பணியை உடனடியாக நிறுத்த வேண்டும் என 'வரலாற்றாசிரியர்' மற்றும் ஆவணப்படத் தயாரிப்பாளருமான சோஹைல் ஹாஷ்மி மற்றும் மொழி பெயர்ப்பாளர் அன்யா மல்ஹோத்ரா இணைந்து டெல்லி நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தனர். அதில், கொரோனா தொற்றுநோய்க்கு மத்தியில் கட்டுமானத் தொழிலாளர்களின் பாதுகாப்பு குறித்து கவலைகளை எழுப்பியிருந்தனர். ஆனால், மத்திய அரசு, கட்டுமானம் நடக்கும் இடத்திலுள்ள தங்கும் வசதிகள், உடனடி மருத்துவ வசதிகள், எடுக்கப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிகைகள் குறித்து ஏற்கனவே தங்கள் பதிலை சமர்ப்பித்திருந்தது. மேலும், மத்திய அரசின் சொலிசிட்டர் ஜெனரல் துஷார் மெஹ்ரா, இந்த திட்டத்தை நிறுத்துவதற்கான குறிக்கோளோடு மட்டுமே இம்மனு தாக்கல் செய்யப்பட்டு இருப்பதாகக் கூறினார். இதனை விசாரித்த நீதிபதிகள், மத்திய அரசின் முன்னேற்பாடுகள், டி.டி.எம்.ஏ அதன் உத்தரவில் எங்கும் கட்டுமானப் பணிகளைத் தடை செய்யவில்லை,



ஒப்பந்தத்தில் நேரம் முக்கியமானதாக இருப்பதால் நவம்பர் 2021க்குள் பணிகள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது என்பதை சுட்டிக்காட்டி சென்ட்ரல் விஸ்டா திட்டப்பணிகளை நிறுத்தி வைக்கக் கோரிய மனுவை தள்ளுபடி செய்தனர்.

# மேற்கு வங்கத்தில் மற்றொரு கொலை




கடந்த ஞாயிற்றுக்கிழமை அன்று மேற்கு வங்கத்தின் கூச் பிஹார் மாவட்டத்தில் அடாபரியில் உள்ள மரத்தில் பா.ஜ.க தொண்டரின் சடலம் மர்மமான முறையில் தொங்கிய நிலையில் காணப்பட்டது. இறந்தவரின் பெயர் அனில் பர்மன் என்றும் இதற்கு முன்பு திருணமூல் கட்சி குண்டர்கள் நடத்திய வன்முறையில் பர்மனின் வீடு தாக்கி அழிக்கப்பட்டதாகவும் உள்ளூர்வசிகள் கூறியுள்ளனர். இந்த விவகாரம் குறித்து ஏ.பி.பி ஆனந்த் தொலைக்காட்சியில் பேசிய அப்பகுதி பா.ஜ.க தலைவர், 'கூச் பிஹார் மாவட்டத்தில் தேர்தலில் தோல்வியடைந்ததற்கு ஆளும் கட்சி பழிவாங்குகிறது. காவல்துறை செயலற்ற தன்மையில் உள்ளது' என தெரிவித்தார். வங்கதேசத்தின் எல்லைக்கு அருகில் மேற்கு வங்கத்தில் உள்ளது கூச் பிஹார் மாவட்டம். இங்கு முஸ்லிம்கள் அதிகம் வாழ்கின்றனர். இங்கு சட்டவிரோத குடியேறிகள் அதிகம். மாநிலத்தில் நடக்கும் பல்வேறு குற்றச் சம்பவங்கள் இங்கிருப்பவர்களால்தான் நிகழ்த்தப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. மேலும், மேற்கு வங்க சட்டமன்றத் தேர்தலின்போது அரசியல் வன்முறையின்போது, திருணமூல் காங்கிரஸ் கட்சித் தலைவரான மம்தா பானர்ஜி தனது கட்சி குண்டர்களை மத்தியப் படைகளை முற்றுகையிட சொன்னார். அதனால் கூச் பிஹாரில், 350 பேர் கொண்ட ஒரு கும்பல், சி.ஐ.எஸ். எஃப் படை வீரர்களை மூர்கமாகத் தாக்கி அவர்களின் ஆயுதங்களை பறிக்க முயன்றது. தற்காப்பு நடவடிக்கையாக, மத்திய படைகள் கும்பல் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியது. இதில், நான்கு பேர் உயிரிழந்தனர் என்பதும் நினைவில் கொள்ளத்தக்கது.

# வாரணாசி காட்டும் வழி

பாரதத்தில் கொரோனாவின் அலை பரவத்துவங்கியபோது பிரதமர் நரேந்திர மோடியின் மக்களவைத் தொகுதியான வாரணாசியிலும் அது பரவ ஆரம்பித்தது. இதைத் தவிர்க்க வி.ஆர்.எஸ் பெற்று பா.ஜ.க.வில் இணைந்த மூத்த ஐ.ஏ.எஸ் அதிகாரி ஏ கே சர்மா, வாரணாசிக்கு செல்ல பணிக்கப்பட்டார். அவர், கிழக்கு உத்தரப்பிரதேசத்திற்கான நோடல் அதிகாரியானார். அவரது மேற்பார்வையில், உடனடியாக கோவிட் தொடர்பான அனைத்து முயற்சிகளையும் கண்காணிக்கவும் ஒருங்கிணைக்கவும் 20 தொலைபேசி இணைப்புகளுடன் 24 மணி நேரமும் செயல்படும் ஒரு கோவிட் 19 கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட்டது. பல சிறிய சுகாதார வல்லுநர்கள் குழுக்களை உருவாக்கி, பாதிப்புப் பகுதிகளைப் பார்வையிடவும், அறிகுறிகள் இல்லாத அல்லது லேசான அறிகுறிகளைக் கொண்ட நோயாளிகளுக்கு மருந்துகளை வழங்கவும் ஏற்பாடுகள் நடந்தன. டி.ஆர்.டி.ஓ உதவியுடன் வாரணாசியில் பி.எச்.யுவில் 750 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை விரைவாக அமைக்கப்பட்டது. அதில் 250 படுக்கை ஐ.சி.யு வசதியுடன் அமைக்கப்பட்டன. தொலைதூர பகுதிகளுக்கும் அத்தியாவசிய மருந்துகள் மற்றும் மருத்துவ ஆக்ஸிஜன் சென்று சேர்வதை ஷர்மா நெறிப்படுத்தினார்.

மற்றொரு புறம், உத்தர பிரதேசத்தின் நகரங்கள் மட்டுமல்ல, கிராமப்புறங்களிலும் சோதனைகளை அதிகரிக்க அம்மாநில முதல்வர் யோகி ஆதித்யநாத் அரசு 22,000 க்கும் மேற்பட்ட கிராம குழுக்களை அமைத்தது. வைரஸ் பரவுவதை சரிபார்க்க மைக்ரோ கட்டுப்பாட்டு மண்டலங்கள் உருவாக்கப்பட்டன. இப்படி ஒருங்கிணைந்த சீரிய முயற்சிகளாலும் திறமையும் அர்ப்பணிப்பும் உள்ள தலைவர்கள் மற்றும் தன்னார்வலர்களாலும் தற்போது அந்த மாவட்டத்தில் கொரோனா பாதிப்பு 300க்கு கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது. வாரணாசி மாவட்ட நிர்வாகமும் உத்தர பிரதேச மாநில அரசும் கொரோனாவை கட்டுப்படுத்துவதில் மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாக செயல்படுகிறது.



# ராஜஸ்தானில் நிர்வாக சீர்கேடு



காங்கிரஸ் ஆட்சி நடக்கும் ராஜஸ்தானின் முதல்வர் அசோக் கெலாட், தடுப்பூசிகள் குறைவாக கிடைப்பதாகக் கூறி மத்திய அரசைக் குற்றம் சாட்டி வருகிறார். ஆனால், நாட்டில் கொரோனா தடுப்பூசி இயக்கம் தொடங்கிய ஜனவரி 16 முதல் தற்போதுவரை 11.5 லட்சத்திற்கும் அதிகமான டோஸ் தடுப்பூசி மருந்தை அம்மாநில அரசு வீணடித்துள்ளது. சமீபத்தில், ராஜஸ்தானில் குப்பைத் தொட்டிகளில் 2,500 க்கும் மேற்பட்ட கொரோனா தடுப்பூசி மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஒரு மாதத்திற்கும் மேலாக அங்கு அமலில் இருக்கும் பொது முடக்கம் ஜூன் 8 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. ஆனால், மாநிலத்தில் ஏழு மாவட்டங்களில் கொரோனா நேர்மறை விகிதம் 10 சதவீதத்திற்கும் அதிகமாக சென்று கொண்டுள்ளது.

பொதுமுடக்க காலத்திலும்கூட, அங்கு குற்றங்கள் குறையவில்லை. குற்றவாளிகளை அம்மாநில அரசு கட்டுப்படுத்த தவறியுள்ளது. ஜெய்ப்பூரில் கூட்டு பாலியல் பலாத்கார சம்பவம் நடைபெற்றது. பரத்பூரில் ஒரு மருத்துவர் தம்பதியினர் பட்டபகலில் சுட்டுக் கொல்லப்பட்டனர். ஸ்ரீ கங்காநகரில் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்ட ஒரு பெண் தற்கொலை செய்து கொண்டார். ராஜஸ்தானின் துங்கர்பூர் மாவட்டத்தில் ஏழு ஆண்டுகளுக்கு முன்பு காலமான தன் தாய் தந்தையின் பெயரில் உள்ள ஆதார் எண்ணை பயன்படுத்தி சம்பந்தமில்லாத ஸ்ரீ கங்கா நகர் என்ற இடத்தில் தடுப்பூசி போடப்பட்டுள்ளது என பிரவீன் காந்தி என்பவர் புகார் அளித்துள்ளார். இது போன்று வரும் தொடர் செய்திகள் அம்மாநிலத்தில் சட்டம் ஒழுங்கு சீர்கெட்டுள்ளதையே எடுத்துக்காட்டுகிறது.

# தடுப்பூசி போட்டவர்களுக்கு மட்டுமே மது விற்பனை

தேசம் முழுவதும் கொரோனா பரவலைத் தடுக்க தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதற்கு முக்கிய ஆயுதமாக இருப்பது தடுப்பூசி. இதனால் அனைவரும் தடுப்பூசி போட்டுக்கொள்ள வேண்டும் என்கிற விழிப்புணர்வை மத்திய, மாநில அரசுகள் செய்து வருகின்றன. இருப்பினும் போதிய விழிப்புணர்வு இன்மை, தேவையற்ற தயக்கம், தவறான வழிகாட்டுதல்கள் காரணமாக தடுப்பூசி போட்டுக்கொள்ள சிலர் மறுக்கின்றனர். சமீபத்தில், உத்தரபிரதேசத்தில் கொரோனா தடுப்பூசி போட வந்தவர்களைப் பார்த்து விஷ ஊசி போட வருகிறார்கள் என நினைத்து அக்கிராமத்தினர், சரயு நதியில் குதித்து தப்பித்த சம்பவமும் நிகழ்ந்தது. இந்நிலையில், உ.பியில், எடவாக் மாவட்டத்தில் கொரோனா தடுப்பூசி போடாதவர்களுக்கு மது விற்பனை செய்ய வேண்டாம் என மாவட்ட நிர்வாகத்தினர் அறிவுறுத்தியுள்ளது. பைரோஸ்பாத் மாவட்ட நிர்வாகம், அரசு ஊழியர்கள் கொரோனா தடுப்பூசி செலுத்திக்கொண்டால் மட்டுமே இந்த மாதத்திற்கான ஊதியம் வழங்கப்படும் என அறிவித்துள்ளது.



# சேவைத்துளிகள்



1. சேவா இன்டர்நேஷனல் அனுப்பிவைத்த 50 ஆக்சிஜன் செறிவூட்டிகள், வட தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களுக்கு சேவாபாரதி மூலம் அனுப்பி வைக்கப்பட்டன.



2. பாரதி சேவா சங்கம், ஆர்.எஸ்.எஸ் சார்பில், ஈரோட்டில் உள்ள காலிங்கராயன் மருத்துவமனை, IMA மெடிக்கல் சென்டர் ஆகிய இரண்டு மருத்துவமனைகளுக்கு தலா இரண்டு என நான்கு ஆக்சிஜன் மிகைப்படுத்தும் இயந்திரங்கள் வழங்கப்பட்டது.



3. கொரோனா ஊரடங்கு காரணமாக காஞ்சிபுரம் மாவட்டத்தில் பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்ட பொம்மை தயாரிப்புத் தொழிலாளர்கள் குடும்பத்திற்கு சோஹோ மற்றும் சேவாபாரதி தமிழ்நாடு இணைந்து அரிசி மற்றும் மளிகை சாமான்கள் 320 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டன.



4. தூத்துக்குடி_மாவட்டம், திருச்செந்தூர் சுற்று வட்டாரப் பகுதிகளில் ஆர்.எஸ்.எஸ், சேவாபாரதி சார்பாக கபசுரக் குடிநீர் வழங்கப்பட்டது.



5. கோவை சிங்காநல்லூர் இ.எஸ்.ஐ மருத்துவமனையில் கொரோனா நோயாளிகளின் உறவினர்களுக்கு இரவு நேர உணவை பா.ஜ.க மாநிலத் துணைத் தலைவர் அண்ணாமலை அளித்து வருகிறார்.



6. வேலூர் மாவட்டம் கே.வி. குப்பம் ஒன்றியம் கீழ்முட்கூர் பஞ்சாயத்தில் ஐந்து கிராமங்களில் உள்ள மக்களுக்கு, ஹிந்து முன்னணி சார்பாக கொரோனா விழிப்புணர்வு நோட்டீஸ் மற்றும் கபசுரக் குடிநீர் வழங்கப்பட்டது.

# இம்ரான்கான் புலம்பல்

ஜம்முகாஷ்மீர் பாரதத்தின் ஒருங்கிணைந்த பகுதி. காஷ்மீரில் முஸ்லிம் ஜிஹாதிகளுக்கு அளிக்கும் ஆதரவை நிறுத்தும்வரை பாகிஸ்தானுடன் பேச்சுவார்த்தை நடத்த முடியாது என்று நமது மத்திய அரசு திட்டவட்டமாக ஏற்கனவே தெரிவித்துள்ள நிலையில், சட்டப்பிரிவு 370 நீக்கத்தை ரத்து செய்தால் மட்டுமே பாரதத்துடன் பேச்சுவார்த்தை சாத்தியமாகும் என்று பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கான் தெரிவித்துள்ளார். சில நாட்களுக்கு முன், தங்கள் நாட்டு பொருளாதாரம் அதலபாதாளத்திற்கு சென்று கொண்டுள்ளது என கவலை தெரிவித்தவரும் இவர்தான். அதேபோல, அமெரிக்கா எங்களை ஆதரிக்க வேண்டும் என கெஞ்சியவர் இவரது நிதியமைச்சர் குரேஷி என்பது குறிப்பிடத்தக்கது.



# பிரிட்டன் உளவு அமைப்பு தகவல்

சீனாவின் 'வூஹான் ஆய்வகத்தில்தான் கோவிட் தோன்றியது' என்பதை சீனா தொடர்ந்து மறுத்து வருகிறது. ஆனால், வூஹான் ஆய்வகத்தில் கடந்த 2019, நவம்பரில் ஆய்வில் ஈடுபட்டிருந்த ஆராய்ச்சியாளர்கள் பலர் கொரோனா போன்ற அறிகுறிகளுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர் என அமெரிக்க உளவு அமைப்பின் அறிக்கை வெளியானது. இதைத் தொடர்ந்து, கொரோனாவின் தொற்றின் தோற்றம் குறித்து விரைந்து விசாரணை நடத்தவும், 90 நாட்களுக்குள் அறிக்கை சமர்ப்பிக்க அமெரிக்க உளவு அமைப்புகளுக்கு அதிபர் ஜோ பைடன் உத்தரவிட்டார். இந்நிலையில், 'சீனாவின் வூஹான் ஆய்வகத்திலிருந்து கசிந்த வைரஸ் தான் கோவிட்19 என்பதற்கு சாத்தியக்கூறுகள் உள்ளன' என, பிரிட்டன் உளவு அமைப்பு நம்புவதாக செய்திகள் வெளியாகியுள்ளன.




விஜயபாரதம் தேசிய வார இதழ்

சந்தா செலுத்த / புதுப்பிக்க

www.vijayabharatham.org

என்ற இணையதளம் அல்லது

044 - 26420870 என்ற தொலைபேசி

எண்ணில் தொடர்பு கொள்ளவும்

# தொண்டில் இன்பம்

கடந்த 22.5.2021 அன்று திருநெல்வேலியில் இருந்து என் நண்பர் பெருமாள், மிகுந்த சோகத்துடனும், மனக் கலக்கத்துடனும் பேசினார். அப்போது, தனது தம்பி மும்பையில் வீட்டில் குளியலறையில் வழுக்கி விழுந்து மருத்துவமனையில் இறக்கும் தருவாயில் உள்ளார். அவர் இறந்துவிட்டால் ஹிந்து மத வழக்கப்படி இறுதிச்சடங்குகள் செய்ய வேண்டும் என கேட்டுக்கொண்டார். இந்நிலையில், தம்பியின் மனைவி புற்று நோய் சிகிச்சைப் பெற்று வீட்டை விட்டு வெளியில் வர இயலாத நிலை. ஒரே தம்பியின் மகள் தனக்குத்தானே கூட உதவிக்கொள்ள இயலாத நோயால் பாதிக்கப்பட்டுள்ளார் எனவும் கூறினார். அவர்களுக்கு உதவ ஆர்.எஸ்.எஸ் உதவி எதாவது கிடைக்குமா?” என்று கேட்டுக்கொண்டார். அப்போது நேரம் மாலை 3.50.

உடனடியாக எனக்குத் தெரிந்த ஆர்.எஸ்.எஸ் மூத்த பிரசாரகர் ஒருவரிடம் பேசி ஒரு மும்பையில் ஸ்வயம்சேவகர் ரமேஷ் என்பவரின் எண்ணைப் பெற்றேன். அவரிடம் பேசி தகவல்களைத் தெரிவித்தேன். ரமேஷ், அந்த மருத்துவமனையில் இருந்து 40 கி.மீ தூரம் தள்ளி குடியிருக்கிறார். மக்களோ, வாகனங்களோ, நடமாட்டம் இல்லாத கோவிட் தொற்று பகுதியான மும்பையில் அந்த BARC மருத்துவமனைக்கு மற்றொரு ஸ்வயம் சேவகரை அனுப்பி, நிலையை அறிந்து, செய்தி அனுப்பினார். அதில், தேவையான உதவிகள் நடைபெறுகின்றன, கவலை வேண்டாம் என பேசி இருந்தார். அதை என் நண்பர் பெருமாளுக்கும் அனுப்பினேன்.

எதிர்பார்த்தது போலவே, நண்பரின் தம்பி மருத்துவமனையில் காலமாகிவிட்டார். உற்றார் உறவினர் யாரும் எங்கும் நகர இயலாத சூழலில், ஆர்.எஸ்.எஸ் அமைப்பின் ஸ்வயம்சேவகர் குழுவினரின் முயற்சியில், இறந்தவரின் மனைவி மருத்துவமனைக்கு அழைத்து வரப்பட்டார். அமரர் ஊர்தி ஏற்பாடு செய்யப்பட்டது. மின் மயானம் முன்பதிவு, புரோகிதர் ஏற்பாடு, இறந்தவர் மனைவியின் முன்னிலையில் ஹிந்து மத வழக்கப்படி இறுதி சடங்குகள் என ஆர்.எஸ்.எஸ் அமைப்பினர் விரைந்து செயல்பட்டது வேறு எதனுடனும் ஒப்பிட இயலாதது. மேலும், என் நண்பருக்கு அத்தனை நிகழ்வுகளையும் படம் பிடித்து அவர்களே வாட்ஸ்அப் மூலம் அனுப்பியும் வைத்தனர்.

இதற்கு பெரிதும் உறுதுணையாக இருந்த பிரச்சாரகர், யார் என்றே முன்பின் தெரியாத ரமேஷ் அவருக்கு துணையாக இருந்த மற்ற ஸ்வயம்சேவகர்கள் அனைவருக்கும் கோடானுகோடி நன்றிகள்.

நடராஜன்